அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கோவை.

தமிழ்த்துறை

தொல்காப்பியம் - பொருளதிகாரம்.

# அலகு - 1

## அகத்திணையியல்

ஐந்து வகை நிலங்களின் அமைப்பு - பொழுது -
உரிப்பொருள்கள் - மக்கள் - விலங்கு, பறவை, தொழில்
பிரிவு - மக்களின் நிலை - தோழி கூற்று நிகழும் இடங்கள்.
கண்டோர் கூற்று நிகழும் இடம், தலைவன் கூற்று நிகழும்
இடங்கள் - கைக்கிளை, பெருந்திணைப் பற்றிய
செய்திகள் - கூறப்பட்டுள்ளன.

## நிலத்தின் பாகுபாடு

1. குறிஞ்சி —மலையும் மலை சார்ந்த இடமும்
2. பாலை —சுரமும் சுரம் சார்ந்த இடமும்
3. முல்லை —காடும் காடு சார்ந்த இடமும்
4. மருதம் —வயலும் வயல் சார்ந்த இடமும்
5. நெய்தல் —கடலும் கடல் சார்ந்த இடமும்

## பொழுதின் பாகுபாடு

| | திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|
| 1. | குறிஞ்சி | —கூதிர், முன்பனி | —யாமம் |
| 2. | பாலை | —இருவகைவனில் பின்பனி | —நண்பகல் |
| 3. | முல்லை | —கார் | —மாலை |
| 4. | மருதம் | —ஆறுபெரும்பொழுதும் | —இருள் புலர் காலை (வைகறை, விடியல்) |
| 5. | நெய்தல் | —ஆறுபெரும்பொழுதும் | —வெய்யோன்பாடு |

பொருள்கள் ?

| திணை | உரிப்பொருள்கள் |
| --- | --- |
| 1. குறிஞ்சி | —புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 2. பாலை | —பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| 3. முல்லை | —இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 4. மருதம் | —ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 5. நெய்தல் | —இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |

15. குறிஞ்சி அல்லது பாலைத்திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்களை வகுத்துரைக்க (1972)

யாமம்.

## குறிஞ்சிக் கருப்பொருள்கள்

1 ஆரணங்கு —சேய் (முருகன்)
2. உயர்ந்தோர் —பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி.
3. அல்லோர் —குறவர், கானவர், குறத்தியர்
4. புள் —கிளி, மயில்
5. விலங்கு —புலி, கரடி, யானை, சிங்கம்
6 ஊர் —சிறுகுடி
7. நீர் —அருவிநீர், சுனை நீர்
8. பூ —வேங்கை, குறிஞ்சி, காந்தள்
9. மரம் —சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம். மூங்கில்
10 உணா —மலைநெல், மூங்கிலரிசி, தினை
11. பறை —தொண்டகம்
12. யாழ் —குறிஞ்சியாழ்
13. பண் —குறிஞ்சிப்பண்
14. தொழில் —வெறியாட்டு, ஐவனம் வித்தல், பைந்தினைகாத்தல், செந்தேனழித்தல், கிழங்ககழ்தல், அருவியாடல், சுனையாடல்

குறிஞ்சியின் உரிப்பொருள்: புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

## பாலைக்கருப்பொருள்

| | | |
|---|---|---|
| 1. | ஆரணங்கு | —கன்னி (கொற்றவை) |
| 2. | உயர்ந்தோர் | —விடலை காளை, மீளி, எயிற்றி |
| 3. | அல்லோர் | —எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| 4. | புள் | —புறு, பருந்து, எருவை, கழுகு |
| 5. | விலங்கு | —செந்நாய் |
| 6. | ஊர் | —குறும்பு |
| 7. | நீர் | —நீர்வற்றிய கிணறு |
| 8. | பூ | —குரா, மரா |
| 9. | மரம் | —உழிஞை பாலை, ஓமை, இருப்பை |
| 10. | உணா | —வழிப்பறிக்கொண்டன, ஊர்க்கொள்ளையிட்டன |
| 11. | பறை | —துடி |
| 12. | யாழ் | —பாலையாழ் |
| 13. | பண் | —பஞ்சுரப்பண் |
| 14. | தொழில் | —போரிடல், சூறையாடல் |

**பாலையின் உரிப்பொருள்:** பிரிதலும் பிரிதல் நிமித்தமும்.

முல்லையின் முதற்பொருள்: நிலம்—புறவும் புறவு சார்ந்த இடமும். பெரும்பொழுது—கார். சிறுபொழுது—மாலை.

## முல்லைக்கருப்பொருள்

1. ஆரணங்கு —நெடுமால்
2. உயர்ந்தோர் —குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி
3. அல்லோர் —இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
4. புள் —கானக்கோழி
5. விலங்கு —மான், முயல்

6. ஊர் —பாடி

7. நீர் —குறுஞ்சுனை, கான்யாறு

8. பூ —குல்லை, முல்லை, தோன்றி, பிடவம்

9. மரம் —கொன்றை, காயா, குருந்தம்

10. உணா —வரகு, சாமை, முதிரை

11. பறை —ஏறு கோட் பறை

12. யாழ் —முல்லையாழ்

13. பண் —சாதாரிப்பண்

14. தொழில் —சாமை முதலிய வித்தல், களை கட்டல், அரிதல், கடாவிடல், குழலூதல், மூவினம் மேய்த்தல் சேவினம் தழுவல், குரவையாடல், கான்யாருடல்.

முல்லையின் உரிப்பொருள்: இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.

## மருதக் கருப்பொருள்

1. ஆரணங்கு —இந்திரன்
2. உயர்ந்தோர் —ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி
3. அல்லோர் —உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்
4. புள் —வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், போதா, கம்புள், குருகு, தாரா
5. விலங்கு —எருமை, நீர்நாய்

## நெய்தற் கருப்பொருள்

1. ஆரணங்கு —வருணன்
2. உயர்ந்தோர் —சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி
3. அல்லோர் —நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்
4. புள் —கடற்காக்கை

5. விலங்கு —சுறவம்
6. ஊர் —பாக்கம், பட்டினம்
7. நீர் —உவர்நீர்க்கேணி
8. பூ —நெய்தல், கைதை, முண்டகம் அடம்பு, கண்டல்
9. மரம் —புன்னை, ஞாழல்
10. உணா —மீனும் உப்பும் விற்றுப் பெற்றன
11. பறை —மீன் கோட்பறை, நாவாய்ப்பம்பை
12. யாழ் —விளரியாழ்
13. பண் —செவ்வழிப்பண்
14. தொழில் —மீன் பிடித்தல், உப்பெடுத்தல், மீன் உணக்கல், புள்ளோப்பல், உணங்கவை விற்றல், கடலாடல்

நெய்தலின் உரிப்பொருள்: இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.

| | கருப்பொருள் | வகை | உரியதிணை |
|---|---|---|---|
| 1. | விடலை | —உயர்ந்தோர் | —பாலை |
| 2. | அளவர் அளத்தியர் | —அல்லோர் | —நெய்தல் |
| 3. | காந்தள் | —பூ | —குறிஞ்சி |
| 4. | நீர்நாய் | —விலங்கு | —மருதம் |
| 5. | செந்நாய் | —விலங்கு | —பாலை |
| 6. | கிழங்ககழ்தல் | —தொழில் | —குறிஞ்சி |
| 7. | புள்ளோப்பல் | —தொழில் | —நெய்தல் |
| 8 | குழல் (ஊதல்) | —தொழில் | —முல்லை |
| 9. | பஞ்சுரம் | —பண் | —பாலை |
| 10. | நறுஞ்சுனை | —நீர் | —குறிஞ்சி |

கருப்பொருள்கள்

| கருப்பொருள்கள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| 1. தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| 2. மக்கள் | வெற்பன் குறவர், குறத்தியர் | ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதர், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| 3. உணவு | மலைநெல், தினை, தேன், கிழங்கு | வரகு, சாமை. | செந்நெல், | மீன், உப்புக்குப் பதிலாகப் பெற்றப் பொருள்கள் | வழிப்போக்கரிட மிருந்து பறித்த உணவுப் பொருள்கள் |
| 4. விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம் | முயல், மான் | எருமை, நீர் நாய். | முதலை, மீன் வகைகள். | வலிமையிழந்த யானை, புலி. |
| 5. பூ | குறிஞ்சி, | முல்லை | தாமரை, குவளை. | நெய்தல், தாழை (தாழம்பூ) | குரவம், பாதிரி |
| 6. மரம் | அகில், வேங்கை சந்தனம் | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் வஞ்சி | புன்னை, ஞாழல் | பாலை இருப்பை, ஓமை |
| 7. பறவை | மயில், கிளி | காட்டுக்கோழி | நாரை, நீர்க்கோழி | கடற்காகம் | கழுகு, பருந்து |
| 8. ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| 9. நீர் | அருவி, சுனை | காட்டாறு | ஆறு, கிணறு, குளம் | கேணி | நீர்வற்றிய சுனை, காட்டாறு |
| 10. பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மண முழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| 11. யாழ் | குறிஞ்சியாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |
| 12. பண் | குறிஞ்சிப்பண் | சாதாரிப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப் பண். |
| 13. தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல் பயிரிடுதல், களைபறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத் தல், உப்பு விற்றல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

இவ்வியல் தொடர்பான கருத்துக்களையும்

விளக்கங்களையும் பாடப் புத்தகத்தில் பார்க்க.